சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்

**OS.No. 1294 / 2022**

**and**

**OS.No.1367/2022**

பி.வா.சா.1. சேனாதிபதி 07.02.2025

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:

தாவா சம்மந்தப்பட்ட நிலம் சிந்தலவாடம்பட்டி கிராமம், சர்வே எண்கள்.54/5, 54/6 ல் உள்ளது என்றால் சரிதான். இது மானாவாரி புஞ்சை நிலம் என்றால் சரிதான். இந்த நிலம் ஆதியில் பைமாஸ் எண்கள் 28.14.2 குழி உள்ள நிலத்தில் வடகிழக்கு மூலையில் 3 குழியாக வழக்கு சொத்து அமைந்துள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 மூலம் முதல் வாதி அவருடைய அண்ணன் ராமசந்திரன், அவரது தந்தை செம்பாகவுண்டர், பெரியப்பா சிவகிரி பழனிச்சாமி கவுண்டர் ஆகிய 4 பேர்களும் சேர்ந்து 28.14.2 குழியில் வடகிழக்கு மூலையில் தாவா சொத்தான 3 குழியை தவிர்த்து மீதி 25.14.2 குழி நிலத்தை பழனியம்மாள், அவரது மகன் ராமசாமிகவுண்டர், அவருடைய மனைவி யசோதாயம்மா ஆகிய மூவருக்கும் தானசெட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் 25.14.2 குழி நிலத்தையும் மற்றும் வேறு நிலங்களையும் சேர்த்து மொத்தமாக சுமார் 46 1/2 குழி நிலம், 2 கிணறு மற்றும் ஊருக்குள் மச்சு லாகட வீடும் சேர்த்து எழுதிக் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த நிலங்களையெல்லாம் சேர்த்து ஏக்கர் கணக்கில் சுமார் 28 ஏக்கர் இருக்கும் என்றால் அது குறித்து கணக்கு போட்டு தான் சொல்லமுடியும். அந்த தான ஆவணத்தின் படி பெரிய பழனியம்மாளுக்கு ஆயுள் பாத்தியமும் அதற்கு பின்பு மகன் ராமசாமிகவுண்டர், மருமகள் யசோதாவுக்கு சர்வ சுதந்திர பாத்தியமும் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த சொத்துக்களை எழுதிக் கொடுத்த நபர்களுக்கு அந்த சொத்துக்கள் பூர்விக சொத்துக்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த ஆவணத்தில் சொல்லப்படும் ராமசாமிகவுண்டர், யசோதா ஆகியோர்கள் எனது அப்பா, அம்மா என்றால் சரிதான். அந்த சொத்துக்கள் போக வடகிழக்கில் உள்ள 3 குழி நிலம் அந்த ஆவணத்தை எழுதிக் கொடுத்த நபர்களின் பூர்விக சொத்து என்றால் சரியல்ல. அந்த சொத்து பெரியபழனியம்மாளின் கணவர் குப்பமுத்துகவுண்டருக்கு பூர்விக சொத்து. அது தான் இந்த தாவா சொத்து என்றால் சரிதான். தாவா சொத்து குப்பமுத்துகவுண்டருக்கு பூர்விக சொத்து என்பதை காட்டக்கூடிய அவர் பெயரிலோ அவரது தந்தை பெயரிலோ உள்ள பத்திரம் மற்றும் பட்டாவை தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆவணங்கள் எதுவும் இல்லை. ஆனால் அவரது சமாதி அந்த 3 குழி நிலத்தில் உள்ளது. தாவா சொத்தான 3 குழி நிலம் என்பது குப்பமுத்துகவுண்டருக்கு எப்போதும் பாத்தியப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 எழுதப்பட்ட அதே நாள்

அன்று அதை எழுதிக் கொடுத்த சிவகிரி பழனிச்சாமி கவுண்டர், சகோதரர் செம்பாகவுண்டர், அவரது மக்கள் ராமசந்திரன், தியாகராஜன் ஆகியோர்கள் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை வா.சா.ஆ.2 ஆவணத்தின் மூலம் பாக பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் எனக்கு தெரியாது. அதற்கு பின்னால் நான் தெரிந்து கொண்டேனா என்றால் சொல்ல கேள்விபட்டுள்ளேன். இரண்டு வழக்கு பிராதையும் நான் படித்து பார்த்துள்ளேன். அந்த பிராதில் தான ஆவணம் எழுதிக்கொடுக்கப்பட்ட ஆவணம் எழுதிய நாளில் வா.சா.ஆ.2 பாக பிரிவினை ஆவணம் ஏற்படுத்திக் கொண்டார்கள் என்ற விபரம் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பாகபத்திரத்தில் நமக்கு பாத்தியப்பட்டு தாவா சொத்துக்களான 3 குழி பிரிக்கப்படாமல் உள்ளது என்று சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை, அந்த 3 குழி நீங்களாக என குறிப்பிட்டு தான் பாகபத்திரம் எழுதப்பட்டது. வா.சா.ஆ.2 ஆவணத்தில் எங்களுக்கு எழுதிக் கொடுத்திருக்க கூடி 1 இலக்க நிலத்தில் நான்குமாலுக்குள் கரிசல் நிலத்தில் 3 குழி மட்டும் நமக்கு பொதுவாக இருக்கிறது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் அவர்கள் எழுதியிருப்பார்கள் எனக்கு தெரியாது. அதற்கு பின்னிட்டு 01.11.1958-ம் தேதியில் செம்பாகவுண்டருக்கும் அவரது மக்கள் ராமசந்திரன், தியாகராஜன் சேர்ந்து அவரது சொத்துக்களை வா.சா.ஆ.3 மூலம் பாகம்பிரித்து கொண்டார்கள் என்றால் எனக்கு தெரியாது. அவரது சொத்துக்களை அவர்கள் பாகம் பிரித்திருப்பார்கள். அந்த பாக பத்திரத்திலும் வா.சா.ஆ.1 மூலம் எனது அப்பா, அம்மா, பாட்டிக்கு எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் நிலத்தில் உள்ள நிலம் போக மீதி 3 குழி நிலம் மேற்படி மூவருக்கும் மற்றும் சிவகிரி கவுண்டருக்கும் பொதுவில் பாத்தியமாக உள்ளது என்று எழுதப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. அதற்கு பின்பு 30.07.1985-ம் தேதி வா.சா.ஆ.4 படி சிவகிரி பழனிச்சாமி கவுண்டர் மகன் ராமசாமி, செம்பாகவுண்டர் மகன் ராமசந்திரன் ஆகியோர் தாவாசொத்துக்களை 1-ம் வாதி தியாகராஜனுக்கு 5,000 பெற்றுக் கொண்டு விடுதலை பத்திர ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்த விடுதலைபத்திரத்திற்கு பின்னிட்டு தாவா சொத்தை 1-ம் வாதி மட்டுமே தனித்து அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. இந்த விடுதலை பத்திரத்திற்கு முன்னிட்டு வாதிகள் குடும்பத்தை தவிர வேறு யாரு பெயரிலும் தாவா சொத்தை பொறுத்து எந்த பதிந்த பத்திரமும் இல்ல என்றால் விடுதலை பத்திரத்திற்கு முன்னிட்டு யார் பெயரில் அந்த சொத்து இருந்தது என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி கண்ட சொத்துக்களில் 1 பகுதி சொத்துக்களான 3 ஏக்கர் நிலத்தை எனது அம்மா யசோதையம்மாள், நான், எனது தம்பி குணசேகரன் ஆக நாங்கள் நீலவரதப்பநாயக்கர் என்பவருக்கு கிரையம் எழுதிக் கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். ஆனால் அதில் நான்குமால் தவறாக எழுதிக் கொடுக்கப்பட்டது. அது தான் வா.சா.ஆ.9 என்றால் சரிதான். அந்த கிரையம் செய்த சொத்து தாவா சொத்தை ஒட்டி மேற்கு பக்கத்தில் உள்ளது என்றால் சரிதான். அந்த கிரைய பத்திரத்தில் தெற்குமாலும்

மேற்குமாலும் என்னுடைய குடும்ப சொத்து என்று சொல்லியுள்ளது என்றால் சரிதான். வடக்கு மாலாக திண்டுக்கல் பழனி ரோடு என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். கிழக்கு மாலாக ராமசந்திரகவுண்டர் வகையறா புஞ்சை நிலத்திற்கும் மேற்கு என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அந்த எல்லை தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. ராமசந்திரகவுண்டர் வகையறா புஞ்சை நிலம் என அந்த பத்திரத்தில் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. அது தாவா சொத்து. கிழக்கு மால் தவறாக இருக்கிறது என்று சொல்லும் நான் தெற்கு, மேற்கு மாலைப் போலவே கிழக்கு மாலும் எங்களது குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட வேறு நிலம் என்று எழுத வேண்டும் என்று நான் சொன்னேனா என்றால் சொல்லவில்லை. ஏன் சொல்லவில்லை என்றால் எனது மாமா தான் குடும்பத்தை நிர்வாகம் செய்தார். அவர் கையெழுத்து கேட்டார் எனது அம்மா முதலில் கையெழுத்து போட்டார். நான் பின்னர் கையெழுத்து போட்டேன். ராமசந்திரன், தியாகராஜன் ஆகியோர்கள் பத்திர அலுவலகத்திற்கு வந்தார்களா என்றால் ராமசந்திரன் வரவில்லை. தியாகராஜன் வந்தார். வா.சா.ஆ.9 ஆவணத்தில் 1-ம் வாதி தியாகராஜன் கையெழுத்து செய்தாரா என்றால் இல்லை. நான் இந்த வழக்கிற்காக எனது மாமாக்கள் தான் எங்கள் குடும்பத்தை நிர்வாகம் செய்தார்கள் என்று தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.9 கிரைய பத்திரத்தை நான், எனது அம்மா படிக்க கேட்டு புரிந்து கொண்டு ஒப்புக் கொண்டு கையெழுத்து செய்தோம் என்றால் சரியல்ல. அந்த பத்திரம் எழுதப்பட்ட போதும் பதிவு செய்யப்பட்ட போதும் அதை பற்றி பேசிய போதும் எனது மாமாக்கள் உடன் இல்லை என்றும் அவர்கள் அந்த சொத்தை பற்றி பேசவில்லை என்றும் எங்கள் குடும்பத்தை நிர்வாகம் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எனது தந்தைக்கு ஆஸ்துமா நோயால் காலமாகிவிட்டார் என்று சொல்லியுள்ளது இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்லப்பட்டுள்ள விபரம் என்றால் சரியல்ல. எங்களது குடும்பத்தை எனது மாமாக்கள் நிர்வாகம் செய்திருந்தால் தாவா சொத்தையும் மற்ற குடும்ப சொத்துக்களையும் நிர்வாகம் செய்து வந்தது உண்மை என்றால் நாங்கள் 22.06.1976-ம் தேதி பி.வா.சா.ஆ.5 ஆவணத்தின் மூலம் தாவா சொத்துக்களையும் சேர்த்து ஈடு எழுதிக் கொடுக்க என்னுடைய மாமா இருவரும் சம்மதித்திருக்க மாட்டார்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ,9 கிரைய ஆவணம் எழுதுவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னர் பி.வா.சா.ஆ,5 ஈட்டு ஆவணத்தை பி.வா.சா.ஆ.6 ஈட்டு மேடு ஓவர் பத்திரத்தின் மூலம் 24.04.1978ம் தேதி பதிவு செய்ததற்கு என்னுடைய மாமா இருவரும் ஒப்புக்கொண்டிருக்க மாட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய குடும்ப நிர்வாகத்தை எங்கள் மாமா இருவரும் மேற்பார்வை செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களில் எனது தாத்தா குப்பமுத்துகவுண்டரின் சமாதி இல்லை என்றால் சரியல்ல. அதேபோன்று அந்த சமாதியில் அம்மாவாசை, திருத்திகை, பொங்கல், ஆண்டு திதி ஆகிய நாட்களில் பொங்கல் வைத்து வழிபாடு செய்து

வருகிறோம் என்று எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளது உண்மைக்கு புறம்பானது என்று சொன்னால் சரியல்ல. 1983ம் ஆண்டில் ராமசாமிகவுண்டருக்கும் எங்கள் குடும்பத்திற்கும் வழக்கு நடைபெற்றதாக நான் எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. அப்படி ஒரு வழக்கு நடைபெறவில்லை என்றும் எனது மாமாக்காள் சமாதானமாக போகும்படி எங்களுக்கு சொன்னதை நாங்கள் கேட்கவில்லை என்றும் அதனால் எங்கள் மாமாவுக்கும் எங்களுக்கும் இடையே விரோதம் என்று நான் எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளது உண்மையல்ல என்றால் சரியல்ல. இல்லாத விரோதத்தின் காரணமாக தான் வா.சா.ஆ.4 விடுதலைபத்திரம் வாதிகளின் குடும்பத்தார்கள்எழுதிக் கொண்டார்கள் என்று நான் எதிர்வாத உரையில் சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. இந்த விரோத்தின் காரணமாக ராமசந்திரன் மகன் ராஜேந்திரனை தூண்டிவிட்டு இந்த தாவா சொத்து சம்மந்தமாக அ.வ.எண்.750/2022 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்று எனது எதிர்வாத உரையில் சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. ராஜேந்திரன் அது பொய் வழக்கு என்பதை தெரிந்து கொண்டு அவராக தள்ளுபடிக்கு விட்டுவிட்டார் என்றால் அது எனக்கு தெரியாது. ராஜேந்திரனும் வழக்கறிஞர் தொழில் செய்து வருகிறார் என்றால் தவறு. முன்பு வழக்கறிஞராக பணிபுரிந்தார். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1, 2, 3 ஆகிய ஆவணங்கள் வா.சா.ஆ,1 ஆவணத்தை அடிப்படையாக வைத்து எனது தந்தை ராமசாமிகவுண்டர் பெயரில் பட்டா தவறாக வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அப்போது என்ன விசாரணை நடைபெற்றது என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4 ல் சர்வே எண்.54/5 நிலத்தை பொறுத்து 4ம் பிரதிவாதி குணசேகரன் பெயரில் வழங்கப்பட்டுள்ள யு.டி.ஆர்.பட்டா விசாரணை அல்லாமல் தவறாக வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. எங்கள் குடும்பத்தில் பி.வா.சா.ஆ.7 ஆவணத்தின் மூலமாக பாகம் செய்து கொண்டது அதில் வழக்கு சொத்துக்களை சேர்த்து கொண்டது இவை எல்லாம் எங்கள் குடும்பத்திற்குள் உற்பத்தி செய்து கொண்டதால் தாவா பாத்தியத்தை பொறுத்து எங்களுக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களையும் சேர்த்து பி.வா.சா.ஆ.8 குத்தகை பத்திரம் நான் தாவா சொத்தை பொறுத்து மோசடியாக தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதேபோல் பி.வா.சா.ஆ,8 ஆவணத்தில் எழுதப்பட்ட மேலெழுத்து ஆகிய பி.வா.சா.ஆ.9 ஆவணமும் என்னால் வழக்கு சொத்துக்களை பொறுத்து பாத்தியம் உருவாக்குவதற்காக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.10 ஆவணம் ராமசாமிகவுண்டர், த.ஃ.பெ.குப்பமுத்துகவுண்டர், குமாரகவுண்டர், திருமலைகவுண்டர் ஆகியோர்கள் பெயரில் கூட்டாக உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.10 ஆவணம் உண்மையான ஆவணம் அல்ல என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.5 மோசடியாக தயார் செய்யப்பட்ட ஆவணத்தை வைத்து பி.வா.சா.ஆ,11 பட்டா பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.12 சிட்டாவில் எனது மாமா பெயர் இருந்து

அது அடிக்கப்பட்டு எங்கள்பெயருக்கு மாற்றப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஒரு வருடம் மட்டும் எனது மாமா பெயரில் இருந்தது. அதற்கு பின்பு எங்கள் பெயரில் மாற்றப்பட்டது. பி.வா.சா.ஆ,13 அடங்கல் தொடர், பி.வா.சா.ஆ,14, 15 ரசீதுகள் தொடர் ஆகிய அனைத்து ஆவணங்களும் வா.சா.ஆ,1 தான செட்டில்மெண்ட் ஆவணத்தை அடிப்படையாக வைத்து தவறான தகவல்களை சொல்லி பட்டா பெற்றுஅதன் அடிப்படையில் செலுத்தப்பட்ட தீர்வை ரசீதுகள் மற்றும் அடங்கல் கணக்குகள் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.5, 6, 7, 8 ஆகிய ஆவணங்கள் அனைத்தும் தாவா சொத்துக்களை பொறுத்து நடைமுறைக்கு வராத ஆவணங்கள் என்றால் சரியல்ல. நான் தவறுதலாக பட்டாவை பெற்றவிபரம் தெரிந்த பின்பு 1-ம் வாதி பட்டாவை மாற்றுமாறு வட்டாட்சியரிடம் மனு கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அதன் பேரில் வட்டாட்சியர் 1-ம் வாதிக்கு பட்டாவை போட்டு கொடுத்துள்ளார். அதன்பேரில் நாங்கள் கோட்டாட்சியரிடம் மேல்முறையீடு செய்தோம். அவர்கள் விசாரணை செய்து எங்கள் பெயருக்கு போட்டு கொடுத்தார். கோட்டாட்சியர் விசாரணைக்கு பின்பு எங்கள் மனுவை தள்ளுபடி செய்துவிட்டார் என்றால் சரியல்ல. அதன்பின்னிட்டு மேல்முறையீடாக மாவட்ட வருவாய் நீதிமன்றத்தில் தியாகராஜன் மேல்முறையீடு செய்தார். அதன்பின்னிட்டு மீட்டு அனுப்புகைக்கு உத்தரவிட்டு கோட்டாட்சியர் பழனி அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. பழனி கோட்டாட்சியர் அந்த மேல்முறையீட்டை பதிவு பெற்ற ஆவணங்கள் இல்லை என்று எங்களது மேல்முறையீட்டை தள்ளுபடி செய்ததால் மீண்டும் மாவட்ட வருவாய் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்து எங்கள் பெயருக்கு பட்டா வழங்கப்பட்டது. அதன்பின்னிட்டு சென்னையில் உள்ள நில ஆணையர் அவர்களில் 1-ம் வாதி 3வது மேல்முறையீட்டை தாக்கல் செய்தார். நில ஆணையர் அவர்கள் உரிமையியல் நீதிமன்றத்திற்கு சென்று பரிகாரம் தேடிக்கொள்ளுங்கள் என்று உத்தரவிட்டார் என்றால் சரிதான். அந்த விபரங்கள் தெரிந்த பின்பு 1-ம் வாதி தாவா சொத்தை அனுபவிப்பதை நான் இடையூறு செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் தான் அனுபவித்து வருகிறோம். அதற்கு பின்னிட்டு தான் வாதி எங்கள் பெயரில் வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கினங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.)

M DHANABAL Digitally signed by M DHANABAL Date: 2025.02.10 13:27:24 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்